### ரூ.20 கோடியில் பன்னோக்கு விளையாட்டு மைதானம் - ரூ.7 கோடியில் பயிற்சி வீரர்கள் தங்கும் விடுதி அமைக்கப்படும்!

# சேலம் - நாமக்கல்லில் இன்னும் பலநூறு விளையாட்டு வீரர்களை உருவாக்குவோம்!

## சேலத்தில் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ் வழங்கி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

சேலம்,அக்.22-

**``இந்தியாவின் தங்கமகன் தம்பி மாரியப்பன் தங்கவேலு, தங்கை துளசிமதி முருகேசன் எனப் பல முன்னணி விளையாட்டு வீரர்களைத் தந்த சேலம் - நாமக்கல் பகுதிகளில் இருந்து, இன்னும் பல நூறு விளையாட்டு வீரர்களை உருவாக்குவோம்" என்றும் ரூ.20 கோடியில் பன்னோக்கு விளையாட்டு மைதானம் - ரூ.7 கோடியில் பயிற்சி வீரர்கள் தங்கும் விடுதி அமைக்கப்படும் என்றும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உறுதியளித்தார்.**

**சேலத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில், சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச் சேர்ந்த 707 ஊராட்சிகளுக்கு கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ் வழங்கும் விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.**

**இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ்' மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கி, சிறப்புரை யாற்றினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**



சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச் சேர்ந்த 710 ஊராட்சி மன்றங்களுக்கு ஆயிரத்து 110 எண்ணிக்கையிலான கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ் வழங்குகின்ற நிகழ்ச்சி. அது மட்டும் இல்லாமல் 202 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த இரண்டாயிரத்து 600 சகோதரிகளுக்கு 23 கோடி ரூபாய் அளவுக்கு வங்கிக் கடன் இணைப்புகளை வழங்குகின்ற நிகழ்ச்சி, 300 பயனாளிகளுக்கு வீட்டு மனை பட்டாக்கள் வழங்குகின்ற நிகழ்ச்சி, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, வேளாண்துறை சார்பாக நலத் திட்டங்கள் மற்றும் கலைஞர் கனவு இல்லம் திட்டம் சார்பாக வீடுகளை ஒதுக்கீடு செய்கின்ற ஒரு நல்ல நிகழ்ச்சி.

**நலத்திட்ட உதவிகள்**

இப்படிப் பல்வேறு துறைகளின் சார்பாக மூவாயிரத்து 600 பயனாளிகளுக்கு ரூ.34 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன்.

இதே சேலம் மாவட்டத்திற்குப் பலமுறை வந்திருக்கிறேன். இந்த நிகழ்ச்சி என் வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சி. கழகத்தின் சாதாரண ஒரு உறுப்பினராகப் பிரச்சாரத்திற்கு வந்திருக்கிறேன். திருமண விழாக்களுக்கு வந்திருக்கிறேன். அதன் பிறகு இளைஞர் அணிச் செயலாளராக இளைஞர் அணியின் நிகழ்ச்சிகளுக்கு வந்திருக்கிறேன். அதன்பிறகு, சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்று இங்கு வந்திருக்கிறேன். அமைச்சராகப் பொறுப்பேற்றுப் பலமுறை சேலம் மாவட்டத்திற்கு ஆய்வுக் கூட்டங்களுக்கு வந்திருக்கிறேன்.

இன்னும் சொல்ல போனால், இளைஞர் அணியின் மாநாட்டையே இந்த சேலம் மாவட்டத்தில்தான் வெற்றிகரமாக நடத்தி முடித்தோம். ஆனால், இந்த முறை இன்னும் கூடுதல் பொறுப்போடு தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்று முதல் முறையாக சேலம் மாவட்டத்திற்கு வந்து, அதுவும் நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் பெயரில் அமைந்துள்ள இந்தக் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ் திட்டத்தைத் தொடங்கி வைக்கின்ற நிகழ்ச்சியில் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

**விளையாட்டு உபகரணங்கள்**

தமிழ்நாட்டில் உள்ள 12,525 கிராம பஞ்சாயத்துக்களுக்கு ரூபாய் 86 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு உபகரணங்கள் வழங்க வேண்டும் என்றுதான் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் திட்டத்தை இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் நாங்கள் தொடங்கி வைத்தோம். இந்தத் திட்டத்தின் கீழ், இதுவரை 26 மாவட்டங்களில் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ்சை வழங்கி இருக்கிறோம். அதன் ஒரு தொடர்ச்சியாக இன்றைக்கு இந்த நிகழ்ச்சி இவ்வளவு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**வெற்றிப் பதக்கங்கள்**

இந்த மேடையில் எங்களைத் தவிர, அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் தவிர, இரண்டு முக்கியமான வி.ஐ.பி-கள் உட்கார்ந்து இருக்கிறார்கள். அவர்கள் யார் என்று உங்களுக்கே தெரியும். சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பாரா அத்லெட்டிக் தம்பி மாரியப்பன் தங்கவேலு அவர்கள் இங்கு வருகை தந்து இருக்கிறார். அதேபோல், தமிழ்நாட்டின் பெருமையாகத் திகழ்கின்ற பாரா பேட்மிட்டன் வீராங்கனை தங்கை துளசிமதி முருகேசன் அவர்களும் இங்கு வருகை தந்திருக்கிறார்.

இந்தியாவின் தங்க மகன் மாரியப்பன் தங்கவேலும், தங்கை துளசிமதியும் பாரா ஒலிம்பிக் உட்பட ஏராளமான சர்வதேச, தேசிய அளவிலான போட்டிகளில் எண்ணற்ற பதக்கங்களைக் குவித்து வருகின்றவர்கள். இவர்கள் விளையாட்டுத்துறையில் சாதிக்கத் துடிக்கின்ற பலருக்கும் ஊக்கம் அளிக்கின்ற வகையில் பல்வேறு சாதனைகளைப் படைத்து வருகிறார்கள். அவர்கள் இருவருக்கும், நாம் அனைவரின் சார்பாக ஒரு மிகுந்த கைதட்டலை அளித்து அவர்களுக்கு நம் பாராட்டைத் தெரிவித்துக் கொள்வோம்.

தங்கை துளசிமதி பேசும்போது சொன்னார், அண்ணன் மாரியப்பன் தங்கவேலுதான் எனக்கு இன்ஸ்பிரேஷன் என்று அவர் குறிப்பிட்டார். இன்னும் சொல்லப்போனால் எனக்கு இன்ஸ்பிரேஷன் தங்கை துளசிமதி அவர்கள்தான். கல்லூரி படிக்கின்ற காலத்தில் நானும் பேட்மிட்டன் விளையாடிக் கொண்டிருந்தேன்.

ஆனால், அதன்பிறகு நேரம் கிடைக்கவில்லை. இப்பொழுது தங்கை துளசிமதி அவர்கள் செய்கின்ற சாதனைகள் வெற்றி பெறுகின்ற பதக்கங்களை எல்லாம் பார்க்கும் பொழுது நானும் வாரத்திற்கு ஒரு நாளாவது ஒரு மணி நேரமாவது பேட்மிட்டன் ஆட வேண்டும் என்ற அந்த முயற்சியை நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். எனவே, எனக்கு இப்போது இன்ஸ்பிரேஷன் தங்கை துளசிமதி அவர்கள்தான்.

**பல நூறு விளையாட்டு வீரர்கள்**

இவர்களைப் போல இன்னும் பல நூறு விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டும் என்றுதான் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை வருடந்தோறும் நடத்தி வருகிறோம். இந்த முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிக்காக, இந்த வருடம் 82 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்யப்பட்டு 36 வகையான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க கடந்த ஆண்டு விண்ணப்பித்தவர்கள், கலந்து கொண்டவர்கள் ஆறு லட்சம் பேர் தமிழ்நாடு முழுக்க ஐந்து பிரிவுகளில் நடந்தது. ஆனால் இந்த ஆண்டு, முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டி 2024-ஆம் ஆண்டு விண்ணப்பித்துக் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை 11 லட்சம் பேர் இந்த விளையாட்டுப் போட்டிகளில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டிருக்கிறார்கள். இது ஒன்றே எடுத்துக்காட்டு இந்த விளையாட்டுப் போட்டி எவ்வளவு பெரிய வெற்றி அடைந்திருக்கிறது என்பதற்கு.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெறும் வீரர்களுக்கான பரிசு தொகையை நம் முதலமைச்சர் அவர்கள் 31 கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார். முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் சென்ற ஆண்டு சேலம் மாவட்டம் 19-வது இடத்தில் இருந்தது. ஆனால், இந்த முறை உங்கள் விளையாட்டு வீரர்களின் உழைப்பால் 38 மாவட்டங்களில் இன்று சேலம் மாவட்டம் தமிழ்நாட்டில் மூன்றாவது இடத்தில் இன்றைக்கு இருக்கிறது.

இன்றைக்குத் தேதி 20 கடைசிப் போட்டி 23-ஆம் தேதி வரைக்கும் நடக்கிறது. எனவே, உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. இரண்டாவது இடத்திற்கோ அல்லது முதல் இடத்திற்கு வருவதற்குக் கூட சேலம் மாவட்ட வீரர்களுக்கு அந்த வாய்ப்பு இருக்கிறது. அதற்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பயிற்சி செய்யுங்கள்**

நாமக்கல் மாவட்டம், கடந்த ஆண்டு 13-வது இடத்தில் இருந்தது. இந்த முறை உங்கள் விளையாட்டு வீரர்களின் உழைப்பால் 13-ஆவது இடத்தில் இருந்து 9-வது இடத்திற்கு முன்னேறி வந்திருக்கிறது. உங்களுக்கும் அதே தான் இன்னும் மூன்று நாட்கள் இருக்கிறது தொடர்ந்து நீங்கள் பயிற்சி செய்தால், நன்றாக விளையாடினால், நீங்கள் அடுத்த மூன்றாவது இடத்திற்கோ இரண்டாவது இடத்திற்கோ ஏன் இன்னும் சேலம் மாவட்டத்தையே முன்னேற்றி வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் கூறிக் கொள்கிறேன்.

நம் முதலமைச்சர் அவர்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 3 ஆயிரத்து 350 விளையாட்டு வீரர்களுக்கு 110 கோடி ரூபாயை உயரிய ஊக்கத்தொகையாக வழங்கி, விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தி இருக்கிறார். முதலமைச்சர் அவர்களின் சீரிய நடவடிக்கையால் முதற்கட்டமாக விளையாட்டு வீரர்களுக்கான மூன்று சதவிகித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில், முதல் கட்டமாகச் சட்டமன்றத்தில் அறிவித்திருந்தேன்.

முதற்கட்டமாக விரைவில் 100 விளையாட்டு வீரர்களுக்கு அரசுப் பணி வழங்க இருக்கிறோம் என்பதை அறிவித்து இருந்தோம். அதற்கான பணிகள் முழு வீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் நம் முதலமைச்சர் அவர்களின் கைகளாலே 100 விளையாட்டு வீரர்களுக்கு அரசு பணி விரைவில் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் மீண்டும் வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் தமிழ்நாடு அரசின் இன்னொரு முயற்சி. தமிழ்நாடு சாம்பியன்ஷிப் அறக்கட்டளையைத் தொடங்கி வைத்தோம். அதற்கு முதன்முதலில் அந்த அறக்கட்டளைக்கு நிதி வழங்கியவர் யார் என்றால், நம் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தன் சொந்த நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாயைக் கொடுத்தார்.

**12 கோடி ரூபாய் அளவுக்கு நிதி உதவி**

ஏழை எளிய மாற்றுத் திறன் விளையாட்டு வீரர்களுக்குத் தொடர்ந்து நிதி உதவிகளைக் கொடுத்து வருகிறோம். இதன் மூலம் பயனடைய விரும்பும் வீரர்கள் யாராக இருந்தாலும் சரி, மாநிலத்தின் எந்தப் பகுதியில் எந்தக் கிராமத்தில் இருந்தாலும் சரி, tn. champions.sdat.in என்ற அந்த இணையதளத்தில் விண்ணப்பித்தால் போதும். அவை பரிசீலனை செய்யப்பட்டு உடனடியாக உங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்படும். இந்த அறக்கட்டளை துவங்கி இரண்டு ஆண்டுகள்தான் ஆகின்றன. அந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 680 வீரர்களுக்கு 12 கோடி ரூபாய் அளவுக்கு நிதி உதவி வழங்கியுள்ளோம்.

சமீபத்தில், பாரிஸில் நடந்த பாரா ஒலிம்பிக் போட்டிக்கு, தமிழ்நாட்டிலிருந்து ஆறு மாற்றுத் திறனாளி வீரர்களை நாம் அனுப்பி வைத்தோம். அதில் நம் தங்கை துளசிமதி, தம்பி மாரியப்பன் தங்கவேலு உட்பட நான்கு வீரர்கள் பதக்கத்தோடு திரும்பி வந்தார்கள். அவர்களுக்கு மொத்தம் ஐந்து கோடி ரூபாய் அளவிற்கு உயரிய ஊக்க தொகையை நம் முதலமைச்சர் அவர்கள் தன் திருக்கரங்களாலே அளித்தார்.

விளையாட்டு வீரர்களுக்கு மட்டுமல்ல, மகளிருக்கும் நம் திராவிட மாடல் அரசின் ஆட்சி ஒரு மிகப்பெரிய பொற்கால ஆட்சி. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் 1989-ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில், இந்தியாவிலேயே முதன் முறையாக மகளிர் சுய உதவிக் குழுக்களைத் தொடங்கி வைத்தார். நம் முதலமைச்சர் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களின் அடுத்த கட்ட வளர்ச்சிக்காகத் தொடர்ந்து உழைத்துக் கொண்டிருக்கிறார். பல்வேறு திட்டங்களைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்.

**96 ஆயிரம் கோடி ரூபாய்**

மகளிர் சுய உதவிக் குழுக்களின் சகோதரிகள் பலர் இன்றைக்குத் தொழில் முனைவோர்களாக உயர்ந்து இருக்கிறீர்கள். இந்தக் குழுக்களுக்குக் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 96 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக் கடன் இணைப்புகளை நம் அரசு வழங்கி உள்ளது. இங்கு கடன் இணைப்பைப் பெற்றுள்ள அந்தக் குழுக்களைச் சேர்ந்த அனைத்து சகோதரிகளுக்கும், தாய்மார்களுக்கும், தங்கைகளுக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகளிரின் பொருளாதாரச் சுதந்திரத்தை உறுதி செய்திட, கழக அரசு எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. உங்களுக்குத் தெரியும் நம் தலைவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, அவர் இட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயணம் திட்டம். இந்தத் திட்டத்தின் மூலம் இந்த மூன்று வருடத்தில் மட்டும் 530 கோடிப் பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு மகளிரும் இந்தத் திட்டத்தின் வாயிலாக, மாதம் கிட்டத்தட்ட 1,000 ரூபாய் சேமிக்கிறார்கள்.

மகளிர் காலையில் எழுந்து பிள்ளைகளுக்குச் சமைத்துக் கொடுக்கச் சிரமப்படக்கூடாது என்பதற்காக, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். இந்தியாவிலேயே முதன்முறையாக அறிவிக்கப்பட்டது நம் தமிழ்நாட்டில்தான்.

**மூன்று லட்சம் மாணவிகள்**

தினமும் திங்கள் முதல் வெள்ளி வரை ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய குழந்தைகள் 20 லட்சம் பேர், இந்த முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் வாயிலாகப் பயன்பெற்று வருகிறார்கள். அரசுப் பள்ளியில் படித்து உயர் கல்வியில் சேர விரும்பும் மாணவிகளுக்கு எந்தக் கல்லூரியாக இருந்தாலும் சரி, `புதுமைப்பெண்' என்ற திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தினார். இதன்மூலம் வருடம் தோறும் மூன்று லட்சம் மாணவிகள் மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்க தொகையாகப் பெற்று வருகிறார்கள்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியாவே திரும்பி பார்க்கின்ற ஒரு திட்டமாக ஒரு திட்டம் தேர்தல் அறிக்கையில் நாம் சொன்ன திட்டம். எதிர்க்கட்சிகள் இதைச் செயல்படுத்தவே முடியாது என்று சொன்ன திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில் அறிமுகப்படுத்தினார். அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்.

இந்தத் திட்டத்தின் வாயிலாகச் சென்ற ஆண்டுச் செப்டம்பர் மாதம் முதல் இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் வரை மாதந்தோறும் ஆயிரம் ரூபாயை கலைஞர் மகளிர் உரிமைத்தொகையாக நம் அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் இதில் பயன் பெற்று வருகிறார்கள்.

நான் ஏற்கனவே பலமுறை கூறியிருக்கிறேன். சில மாவட்டங்களில், சில பகுதிகளில் குறைகள் இருக்கின்றன. ஒன்றை மட்டும் உறுதியாக நான் கூறிக் கொள்கிறேன். எனது துறை சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையில்தான் அந்தத் திட்டமும் வருகிறது. விரைவில், முதலமைச்சரின் பார்வைக்கு எடுத்துச் சென்று கண்டிப்பாக தமிழ்நாட்டில் உள்ள தகுதி உள்ள அனைத்து மகளிருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை திட்டம் கண்டிப்பாக வழங்கப்படும் என்று மீண்டும் நான் கூறிக் கொள்கிறேன்.

அதேபோல் இங்கு 300 பேருக்கு வீட்டு மனை பட்டாக்களைக் கொடுக்க இருக்கிறோம். பல ஆண்டுகளாக பட்டா கிடைக்காமல் இருந்த நிலையில், நம் முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக இன்றைக்கு பட்டா உங்களைத் தேடி வந்திருக்கிறது. சேலத்தில் மட்டுமல்ல தலைநகர் சென்னையிலும், சென்னையைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலும் இந்த பட்டா பிரச்சினை பல வருடங்களாக இருந்து வருகிறது.

இதனைத் தீர்க்க நம் முதலமைச்சர் அவர்கள் வருவாய்த்துறை அமைச்சர் தலைமையில், ஒரு குழுவை அமைத்தார். நானும் அந்தக் குழுவில் ஒருவனாக இருந்தேன். அந்தக் குழுவின் நடவடிக்கையால் இன்றைக்கு சென்னையில் மட்டும் சுமார் 36 ஆயிரம் பட்டாக்கள் தயார் செய்யப்பட்டு, மக்களிடம் அவற்றைப் படிப்படியாகக் கொடுத்து வருகிறோம்.

தமிழ்நாடு முழுவதும் பட்டா பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நிச்சயம் நம் முதலமைச்சர் அவர்கள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பார் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சொந்த வீடு என்னும் கனவை நனவாக்க `கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். இங்கே இந்த நிகழ்ச்சியின் மூலம் கலைஞர் கனவு இல்லம் வீடுகளை பெற்றுள்ள 45 பயனாளிகளுக்கு வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**1,500 ரூபாயாக உயர்வு**

75 மாற்றுத்திறனாளி சகோதர, சகோதரிகளுக்கு இங்கு மூன்று சக்கர ஸ்கூட்டர் உட்பட ஏராளமான நலத்திட்டங்களை வழங்கி இருக்கிறோம். மாற்றுத்திறனாளிகளைத் தாய் உள்ளத்தோடு நடத்தக்கூடிய அரசாக நம் திராவிட மாடல் அரசு திகழ்ந்து கொண்டிருக்கிறது. கழக அரசு அமைந்த உடன் மாற்று திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித் தொகையை ஆயிரம் ரூபாயாக இருந்ததை, நம் முதலமைச்சர் அவர்கள் 1,500 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தார்கள்.

மாற்றுத்திறனாளிகளுக்கான கல்வி உதவித் தொகையை இரு மடங்கு உயர்த்தி உத்தரவு இட்டார்கள். பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் மாற்றுத் திறனாளி மாணவர்கள் அவர்களின் படிப்புக்கு ஏற்ப ஆண்டுக்கு 2,000 ரூபாய் முதல் ஒரு லட்சம் ரூபாய் வரை கல்வி உதவித் தொகை பெறுகிறார்கள்.

கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ்சைப் பெற வருகை தந்துள்ள அத்தனை ஊராட்சிகளுக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கலைஞர் விளையாட்டு உபகரணங்களைக் கொண்டு நன்றாக விளையாடுங்கள். அதை பயன்படுத்துங்கள். அவற்றைப் பாதுகாத்து வைத்துக் கொள்ளுங்கள். விளையாட்டு உபகரணங்களை நீங்கள் எப்படிப் பயன்படுத்துகிறீர்கள் என்று தொடர்ந்து நாங்கள் ஆய்வு செய்வோம். கிராம ஊராட்சிகளில் வழங்கப்பட்டு வரும் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டை நம் முதலமைச்சரின் அனுமதி பெற்று வரும் காலங்களில் நகரங்களிலும் வழங்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

இங்கு வெற்றிகரமாக செயல்படுகின்ற இரண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களை பற்றி ஒரு சிறு குறிப்பு பேச விரும்புகிறேன். சேலம் மாவட்டம், ஆத்தூரில் செயல்பட்டு வருகின்ற `ஆனந்தம் மகளிர் சுய உதவிக் குழுவினர்' இங்கு வருகை தந்திருக்கிறார்கள். இந்தக் குழு கடந்த 2020-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. சிறிய அளவில் தொடங்கப்பட்ட இந்தக் குழுவில் இன்றைக்கு ஒவ்வொரு சகோதரியும் துணை தொழில் முனைவோராக உயர்ந்து இருக்கிறார்கள். இந்தக் குழுவின் மொத்த சேமிப்பு மூன்று லட்சத்து 50 ஆயிரத்தைத் தாண்டி உள்ளது. இந்த குழுவினருக்கு இதுவரை 13 லட்சம் அளவிற்கு வங்கிக்கடன் இணைப்புகளை வழங்கி, நம் கழக அரசு ஊக்கப்படுத்தி இருக்கிறது.

**ஆனந்தம் பெருகட்டும்**

ஆனந்தம் மகளிர் சுய உதவிக் குழு சகோதரிகள் வாழ்வில், மேலும் மேலும் ஆனந்தம் பெருகட்டும். அவர்களுக்கு நாம் அனைவரும் நம் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்வோம்.

அயோத்தியாபட்டினம் ஒன்றியம், சின்னக் கவுண்டாபுரம் ஊராட்சியில் இருந்து ஏழாவது மைல் மகளிர் சுய உதவிக் குழுவினர் இங்கு வருகை தந்து இருக்கிறீர்கள். 2001-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தக் குழுவில் இப்பொழுது இருபது சகோதரிகள் உறுப்பினராக இருக்கிறீர்கள். ஆரம்பத்தில் சிறிய அளவில் கடன் பெற்ற இந்தக் குழுவின் சகோதரிகள், இன்று பல்வேறு சுயத்தொழில்களை செய்து வருகிறார்கள்.

இக்குழுவினரின் 23 ஆண்டு உழைப்புக்குப் பலனாக இவர்களின் தற்போதைய சேமிப்பு 30 லட்சம் ரூபாயாக உயர்ந்து இருக்கிறது. இந்தக் குழுவின் ஒவ்வொரு சகோதரியும் மாதம் 20 ஆயிரம் முதல் 60 ஆயிரம் வரை வருவாய் ஈட்டி வருகிறார்கள். இவர்களுக்கு ஒரு கோடிக்கும் மேலாக வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு குழுக்களுமே சிறப்பாக செயல்பட்டதன் காரணமாக தமிழ்நாடு அரசின் `மணிமேகலை விருது' இந்த இரண்டு குழுவிற்கும் வழங்கப்பட்டு இருக்கிறது.

இந்த சகோதரிகளைப் போல இங்கு வந்திருக்கின்ற ஒவ்வொரு மகளிரும் வாழ்வில் சாதிக்க வேண்டும் அதற்காகத்தான் இன்றைக்கு 23 கோடி அளவிற்கு வங்கி கடன் இணைப்புகளை வழங்கி உள்ளோம். அதனை நம் முதலமைச்சர் அவர்கள் வெறும் கடன் தொகையாக பார்க்கவில்லை. உங்கள் உழைப்பின் மீது வைத்துள்ள நம்பிக்கை தொகையாகத்தான் நம் முதலமைச்சர் அவர்கள் வங்கி

இந்த நேரத்தில் நம் விளையாட்டு மேம்பாட்டு துறையின் சார்பாக சேலம், நாமக்கல் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் சில திட்டங்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்தின் போது சேலத்தில் மாவட்டப் பன்னோக்கு விளையாட்டு மைதானம் அமைக்கப்படும் என்ற வாக்குறுதியை நம் தலைவர் அவர்கள் அளித்து இருந்தார்கள். அதன்படி 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட பன்னோக்கு விளையாட்டு மைதானத்திற்கான கட்டுமான பணிகள் இப்போது துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு மினி ஸ்டேடியம் அமைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் வாக்குறுதி கொடுத்து இருந்தோம். அதன்படி, இந்த சேலம் மாவட்டத்தில் மட்டும் மேட்டூர், ஆத்தூர், சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதிகளில் தலா மூன்று கோடி ரூபாய் மதிப்பீட்டில் மினி ஸ்டேடியம் கட்டப்பட உள்ளது. சேலம் மகாத்மா காந்தி விளையாட்டு மைதானம் 3 கோடியே 63 லட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட உள்ளது.

ஆகவே, சேலம் நாமக்கல் மாவட்டங்களைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் இந்த வசதிகளை எல்லாம் நன்றாக பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு காலை நம் முதலமைச்சர் அவர்கள் நான் சேலம் மாவட்டத்திற்கு இந்த கலைஞர் ஸ்போர்ட்ஸ் திட்டத்தைத் தொடங்கி வைக்க வருகின்றேன் என்று தெரிந்தவுடன் என்னை காலை 9 மணி அளவில் தொலைபேசியில் அழைத்தார். அழைத்து ஒரு முக்கியமான அறிவிப்பை இந்த கூட்டத்தில் உங்கள் முன் அறிவிக்க சொன்னார்.

**விளையாட்டு வீரர்கள் – தங்கும் விடுதிகள்**

அதாவது நான் சேலம் மாவட்டத்திற்கு வரும்போதெல்லாம் பல கோரிக்கை மனுக்கள் அளிக்கப்படும். அதில் மிக மிக முக்கியமான நீண்ட நாள் கோரிக்கை. விளையாட்டு வீரர்கள் தங்கி பயிற்சி பெறும் வகையில் ஒரு விளையாட்டு விடுதி அமைத்துத்தர வேண்டும் என்பதுதான் அந்த கோரிக்கை. அந்த கோரிக்கையை நம் முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு எடுத்துச் சென்றேன். ரூ.7 கோடி மதிப்பீட்டில் 60 வீரர்கள் தங்கி பயிற்சி பெறும் வகையில் விரைவில் விளையாட்டு தங்கும் விடுதி சேலத்தில் அமைத்துத் தர நம் முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கி இருக்கிறார் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு வருகை தந்துள்ள அரசின் நலத்திட்டங்களைப் பெற்றுள்ள அத்தனை பேருக்கும் மீண்டும் என் வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்த வாய்ப்பைக் கொடுத்த அத்தனைப் பேருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர்கள் ராஜேந்திரன், மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.எம்.செல்வகணபதி, கே.ஆர்.என்.ராஜேஷ்குமார், கே.இ.பிரகாஷ், மலையரசன், மணி, மாதேஸ்வரன், சேலம் மாநகராட்சி மேயர் ராமச்சந்திரன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.அருள், ராமலிங்கம், பொன்னுசாமி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சித் தலைவர்கள் டாக்டர் ரா.பிருந்தா தேவி ஐ.ஏ.எஸ்., மருத்துவர் உமா ஐ.ஏ.எஸ்., நகரமைப்பு மண்டல திட்டக் குழு உறுப்பினர் மதுரா செந்தில், சேலம் மாநகராட்சி ஆணையர் ரஞ்சித் சிங் ஐ.ஏ.எஸ்., துணை மேயர் சாரதா தேவி, பாரா ஒலிம்பிக் போட்டியில் மூன்று முறை பதக்கம் வென்ற மாரியப்பன் தங்கவேலு, பாரா ஒலிம்பிக் பேட்மிட்டன் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற துளசிமதி முருகேசன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் எஸ்.ஆர்.சிவலிங்கம், தடங்கம் சுப்ரமணியம், மாவட்ட வருவாய் அலுவலர் மேனகா மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர்கள், விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள், கழக முன்னணியினர், அரசு நலத்திட்ட பயனாளிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.10.2024) சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு வழங்கும் விழாவில், சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச் சேர்ந்த மொத்தம் 707 ஊராட்சிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய 1,070 தொகுப்புகளை வழங்குவதன் அடையாளமாக ஊராட்சி மன்றங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்புகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் (மாநிலங்களவை), டி.எம்.செல்வகணபதி (சேலம்), வி.எஸ்.மாதேஸ்வரன் (நாமக்கல்), தே.மலையரசன் (கள்ளக்குறிச்சி), ஆ.மணி (தருமபுரி), கே.இ.பிரகாஷ் (ஈரோடு) சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.அருள் (சேலம் மேற்கு), பெ.ராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்). இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி. மாவட்ட ஆட்சித்தலைவர்கள் டாக்டர் இரா. பிருந்தாதேவி, (சேலம்) மருத்துவர் ச. உமா, (நாமக்கல்). சேலம் மாநகராட்சி ஆணையாளர் ரஞ்ஜீத் சிங் சேலம் மாநகராட்சி துணை மேயர், திருமதி மா.சாரதாதேவி உள்பட விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.